தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
மே 02, 2011 இதழுடன் இணைப்பு

விண்டோஸ் எக்ஸ்பி விட்டு விடுங்கள்

தொடரும் ஓ.எஸ். குறிப்புகள்

பட்ஜெட் விலையில் டேப்ளட் பிசி

கம்ப்யூட்டருக்குள் ஒரு திறனாய்வு

தினமலர் கம்ப்யூட்டர் மலர்
02-05-2011

விண்டோஸ் எக்ஸ்பி – விட்டுவிடுங்கள்

இன்னும் பன்னாட்டளவில், கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தும் ஆப்பரேட்டிங் சிஸ்டங்களில், விண்டோஸ் எக்ஸ்பி முதலிடம் கொண்டுள்ளது. விண்டோஸ் 7 கூடுதல் வசதிகளுடன், நவீன தொழில் நுட்பத்தில் இயங்குவதாக இருந்தாலும், கூடுதல் ஹார்ட்வேர் தேவை, சில புரோகிராம்களை ஏற்றுக் கொள்ளா நிலை, புதிய வகையிலான இன்டர்பேஸ் எனப் பல தடைகளை விண்டோஸ் 7 கொண்டுள்ளதால், பெரும்பாலானவர் கள் விண்டோஸ் எக்ஸ்பியையே (55%)தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர். பல நிறுவனங்கள் கூட, விண்டோஸ் 7 தொகுப்பிற்கு மாறினால், அதிக செலவாகும் என்ற நிலையில், தங்கள் பெர்சனல் கம்ப்யூட்டர் பணியினை விண்டோஸ் எக்ஸ்பி கொண்டே முடிக்கின்றனர். இன்னும் இது நன்றாகச் செயல்பட்டுக் கொண்டுள்ளதே என்பது அவர்களின் வாதம். ஆனால், மைக்ரோசாப்ட் விடாப்படியாக, எக்ஸ்பியை முடிவுக்குக் கொண்டு வரும் வேலையில் இறங்கியுள்ளது.

இது குறித்த பலத்த விவாதங்கள் கம்ப்யூட்டர் தொழில்நுட்ப வல்லுநர் களிடையே நடந்து வருகிறது. இன்னும் விண்டோஸ் எக்ஸ்பி சிறப்பாகச் செயல் படுகிறது என்பதற்காக, அதனையே பின்பற்ற வேண்டியதில்லை. மோர்ஸ் முதலில் கொடுத்த, தந்தி அனுப்பும் மோர்ஸ் கோட் கூடத்தான் இன்னும் நன்றாகச் செயல்பட்டு பயன் தந்து கொண்டிருக்கிறது. அதற்காக, அதனையே வைத்துக் கொண்டிருக்க முடியுமா என்று கேட்கின்றனர். விண்டோஸ் எக்ஸ்பியைக் காட்டிலும், விண்டோஸ் 7, மேக் ஓ.எஸ். எக்ஸ் மற்றும் லினக்ஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டங்கள் மிகச் சிறப்பான பயன்பாட்டினைத் தருகின்றன. இவை கூடுதல் பாதுகாப்பு கொண்டவை; இவை அனைத்தும் நவீன ஹார்ட்வேர் மற்றும் சாப்ட்வேர் தொழில்நுட்பத்தினைக் கையாண்டு, நமக்கு அதிக பயன்களைத் தருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக, ஸ்மார்ட் போன்களும், டேப்ளட் பிசிக்களும் பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருகிறது. குறிப்பிட்ட நேரத்தில் தான் அலுவலக

உள்ளே

தொடரும் ஓ.எஸ். குறிப்புகள் பக்கம் 4
பட்ஜெட் விலையில் டேப்ளட் பிசி பக்கம் 10
கம்ப்யூட்டருக்குள் ஒரு திறனாய்வு பக்கம் 13

வாசகர்களே . . .

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல், 'சி.டி.'க்களை கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

2010 அக்டோபர் மாதத்திற்கு பின்னர் வெளியான 'சிடி'க் களை மட்டும் அனுப்பவும். 'சி.டி.' யை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், விலை, வெளியிட்ட நாள், கிடைக்கும் இடம் ஆகியவற்றை குறிப்பிடவும்.

தினமலர் - கம்ப்யூட்டர் மலர், 8, காசா மேஜர் ரோடு, எழும்பூர், சென்னை 600 008.
computermalar@dinamalar.in

வேலை பார்ப்பது என்றில்லாமல், நாம் விரும்பும் நேரத்தில் பணியாற்ற இவை துணை புரிகின்றன. இதனால், இவை எந்நேரமும் நெட்வொர்க் கில் இணைக்கப்பட்டே உள்ளன. இந்த சாதனங்கள் எதிலும் விண்டோஸ் எக்ஸ்பி இயங்குவதில்லை. வேலை நடை பெறாமலா

இருக்கிறது என்று இந்த வல்லுநர்கள் கேட்கின்றனர்.

அடுத்தது, மாறினால் செலவு அதிகம் என்பது. உண்மை என்னவென்றால், மாறாவிட்டால்தான் அதிகம் செலவு. தொடக்கத்தில் செலவு சற்று அதிகமாக இருந்தாலும், தொடர்ந்து நாம் நம் ஊழியர்களுக்கு நவீன தொழில் நுட்பத்தினைத் தந்தால்தான் அவர்கள் நல்ல முடிவினை நமக்குத் தர முடியும். மேலும் வர்த்தகம், அலுவலகம் என்று வருகையில், நம்முடன் போட்டியில் உள்ளவர்கள், நவீன தொழில் நுட்பத்திற்கு மாறுகையில், நாமும் மாற வேண்டியது நல்லது தானே.

சிலர் தாங்கள் உருவாக்கிய அலுவலகத் திற்கான சாப்ட்வேர் தொகுப்புகளை மாற்றி அமைக்கத் தயங்கி, இன்னும் விண்டோஸ் எக்ஸ்பி தொகுப்பினையே பயன்படுத்தி வருகின்றனர். இது மேம்போக்காகச் சரி என்றாலும், முன்னேற்றத்தினைக் கருதி, பழையதே போதும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு மாற வேண்டும்.

மைக்ரோசாப்ட் வரும் 2014ல் எக்ஸ்பிக்குத் தரும் ஆதரவினை முற்றிலுமாக நிறுத்த இருக்கிறது.

எக்ஸ்பி இயக்கத்தில் எந்த சாப்ட்வேர் புரோகிராமும் தயாரிக்கப்பட மாட்டாது. இதனால், தொடர்ந்து எக்ஸ்பியையே பயன்படுத்தி வந்தால், போட்டியில் நாம் தூசிக்குச் சமமானவர்களாக மாறிவிடுவோம் என்று பலர் எச்சரிக்கை தந்துள்ளனர்.

மேலும் அண்மையில் மைக்ரோசாப்ட் வெளியிட்ட இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பு 9, எக்ஸ்பியில் இயங்கா நிலையில் வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து, பரவலாக எதிரான கருத்துக்கள் வந்தாலும், மைக்ரோசாப்ட் இந்த முடிவிற்கு வருந்துவதாகத் தெரிய வில்லை. தன் முடிவில் மிக உறுதியாக நிற்கிறது. பத்தாண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட ஒரு சிஸ்டத்தின் அடிப்படையில், இனிமேல் எதுவும் புதிய ஒன்றை அமைக்கக் கூடாது என்று இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பினை உருவாக்கிய குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த ஒன்றைத் தான் கூகுள் மற்றும் பயர்பாக்ஸ் வழங்கும் மொஸில்லா ஆகிய நிறுவனங்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. தங்களின் புதிய பிரவுசர்கள், விண்டோஸ் எக்ஸ்பியிலும் செயல்படும் வகையில் அமைத்துள்ளனர். இதனால், பலர் இன்டர்நெட் எக்ஸ்புளோரரிலிருந்து இந்த இரண்டு பிரவுசர்களில் ஒன்றுக்கு மாறும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இருப்பினும் மைக்ரோசாப்ட் தன் நிலையிலிருந்து மாறுவதாக இல்லை. மக்கள் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9 மற்றும் விண்டோஸ் 7 செயல்பாடுகளைக் கண்டு, எக்ஸ்பியை விட்டு வெளியேறுவார்கள் என்று உறுதியாக நம்புகிறது.

தொடரும் ஓ.எஸ். குறிப்புகள்

சென்ற இதழில் ஆப்பரேட்டிங் சிஸ்டம் தொடர்பான சில சொற்களுக்கான விளக்கம் அளிக்கப்பட்டது. இதனை வரவேற்று பல வாசகர்கள் எழுதி உள்ளனர். கம்ப்யூட்டர் அறிவியல் படிக்கும் மாணவர்கள் பலர், தாங்கள் ஏற்கனவே சொற்களை அறிந்து பயன்படுத்தி இருந்தாலும், பல கூடுதலான தகவல்கள் கம்ப்யூட்டர் மலரில் தரப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து இன்னும் சில தொழில் நுட்ப சொற்களுக்கு விளக்கம் தரவும் எனக் கேட்டு, பல சொற்களையும் குறிப்பிட்டு அனுப்பி உள்ளனர். இவர்களின் விருப்பத்திற்கிணங்க, ஆப்பரேட்டிங் சிஸ்டம் தொடர்பான மேலும் சில தொழில் நுட்பச் சொற்களுக்கு விளக்கம் இங்கே தரப்படுகிறது.

1. Embedded Object (எம்பெட் (பதித்தல்) ஆப்ஜெக்ட்): அப்ளிகேஷன் புரோகிராம் ஒன்றில் உருவாக்கப்பட்டு, இன்னொரு அப்ளிகேஷனில் உருவாக்கப்பட்ட டாகுமெண்ட்டில் பதிக்கப்படும் ஆப்ஜெக்ட். எடுத்துக்காட்டாக அடோப் போட்டோஷாப் அல்லது எம்.எஸ். பெயிண்ட் புரோகிராமில் உருவான ஆப்ஜெக்ட் ஒன்றை, வேர்ட் டாகுமெண்ட்டில் எம்பெட் செய்வது. ஆப்ஜெக்ட் அல்லது படத்தினை அப்படியே ஒட்டாமல், எம்பெட் செய்வதன் மூலம் அந்த ஆப்ஜெக்டின் ஒரிஜினல் பார்மட் அப்படியே வைக்கப் படுகிறது. இவ்வாறு பதிக்கப்பட்ட ஒரு ஆப்ஜெக்ட்டை, அதன் ஒரிஜினல் புரோகிராம் மூலம் எடிட் செய்திடலாம். விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில், ஆப்ஜெக்ட் ஒன்றைப் பதித்திட OLE (Object Linking and Embedding) என்று

அழைக்கப்படும் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

2.Event (நிகழ்வு): புரோகிராம் ஒன்றினால், அறியப்படும் ஒரு நிகழ்வு. கம்ப்யூட்டர் செயலாக்கம் அனைத்துமே, நிகழ்வுகளின் தொடர்ச்சியே. எடுத்துக் காட்டாக, மவுஸ் கிளிக் செய்வது ஒரு நிகழ்வு. கீ ஒன்றினை அழுத்துவது மற்றொரு நிகழ்வு. மேக் இன்டோஷ் மற்றும் விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டங்களில் இயங்கும் புரோகிராம்கள் அனைத்தும் இத்தகைய நிகழ்வுகளாலேயே இயக்கப்படுகின்றன. இந்த நிகழ்வுகளுக்கான ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் பதில் செயல்பாடுகள் தான் சிஸ்டம் செயல்பாடுகள்.

3.File Handle (கோப்பு அடையாள எண்): பைல் ஒன்று திறக்கப்படுகையில், ஆப்பரேட்டிங் சிஸ்டம் அதற்கென ஓர் எண்ணை ஒதுக்குகிறது. இதனையே பைல் ஹேண்டில் என அழைக்கிறோம். பைலை ஆப்பரேட்டிங் சிஸ்டம் அணுகுகையில், பைல் ஹேண்டிலைப் பயன்படுத்தும். இந்த பைல் ஹேண்டில் களுக்கென கம்ப்யூட்டரின் மெயின் மெமரியில் தனி இடம் ஒதுக்கப்படும். இந்த மெமரியின் அளவைப் பொறுத்து, எத்தனை பைல் ஹேண்டில்கள் இங்கு தங்க வைக்கப்படலாம் என்பது முடிவாகும். அதாவது ஒரே நேரத்தில் எத்தனை கோப்புகள் திறக்கப்பட்டு பயன்படுத்தப் படலாம் என்பதனை அறியலாம். டாஸ் மற்றும் விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டங்களில், அதிக பட்சம் எத்தனை பைல்கள் திறக்கப் படலாம் என்பதனை CONFIG.SYS என்ற பைலில் உள்ள FILES= என்ற ஸ்டேட்மெண்ட்டில் வரையறை செய்திடலாம்.

4.Interrupt (நிகழ்வினைச் சுட்டும் ஒரு சிக்னல்): ஒரு புரோகிராம் இயங்கு கையில், நிகழ்வு ஒன்று ஏற்படும் போது, அதனை, புரோகிராமிற்கு எடுத்துக் காட்டுவது இந்த இன்டரப்ட் எனப்படும் சிக்னல் ஆகும். இது போன்ற ஒரு சிக்னல் கிடைக்கையில், அந்த புரோகிராம் அதற்கான குறிப்பிட்ட செயல்பாட்டினை மேற்கொள்ளும். இவ்வாறு ஒரு சிக்னல் அனுப்பப்படுகையில், புரோகிராம் தன் தொடர் செயல்பாட்டினைத் தற்காலிக மாக நிறுத்தி வைத்து, சிக்னலுக்கான செயல்பாட்டில் இறங்கும்.

இன்டரப்ட் சிக்னல்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் கிடைக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு கீ அழுத்தலும், ஒரு இன்டரப்ட் சிக்னலை அனுப்பும். பிரிண்டர் போன்ற பிற துணை சாதனங்களும் இன்டரப்ட் சிக்னல்களை அனுப்பலாம். இந்த வகை இன்டரப்ட் hardware interrupt என அழைக்கப்படுகிறது. புரோகிராம் ஒன்றினால், ஏற்படுத்தப்படும் சிக்னல்கள் software interrupt என அழைக்கப் படு கின்றன. இதனை a trap அல்லது an exception எனவும் அழைக்கின்றனர். பொதுவாக, ஒரு பெர்சனல் கம்ப்யூட்டர், 256 வகையான சாப்ட்வேர் இன்டரப்ட் மற்றும் 15 வகையான ஹார்ட்வேர் இன்டரப்ட்களை சப்போர்ட் செய்கிறது.

6. Job (பணி): கம்ப்யூட்டர் சிஸ்டம் செயல்படுத்தும் ஒரு வேலைக்கு Job என்று பெயர். இந்த வேலை ஒரே ஒரு புரோகிராம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட புரோகிராம்களால் மேற்கொள்ளப் படலாம்.

7. Kernel கெர்னல் (மையம்): ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஒன்றின் மத்திய தொகுப்பு. ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் முதலாவதவாக லோட் செய்யப்படும் பகுதி இதுதான். மெயின் மெமரியில் எப்போதும் இடம் பெறும். மெமரியில் எப்போதும் இருப்பதால், இது அளவில் சிறியதாக இருப்பது நல்லது; சிறியதாகவே இருக்கும். ஆனால் அதே நேரத்தில், ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் மற்ற பகுதிகளுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் தந்து கொண்டே இருக்கும். இதன் முக்கிய சேவைகளைக் குறிப்பிட்டுச் சொல்வதென்றால், மெமரி நிர்வாகம், செயல்பாடு, செயல்பாடுகளின் நிர்வாகம், டிஸ்க்கை செயல்படுத்தல் ஆகியவற்றைக் கூறலாம்.

8. MBR மாஸ்டர் பூட் ரெகார்ட்: கம்ப்யூட்டர் பூட் செய்யப்படுகையில், இயக்கப்படும் முதல் புரோகிராம். எனவே ஹார்ட் டிஸ்க்கின் முதல் செக்டாரில் இது தங்கிச் செயல்படும். பூட் செயல்பாட்டி னை இது தொடங்கி வைக்கும். இதற்கு பார்ட்டிஷன் டேபிள் என்ற

அமைப்பைப் பார்த்து, எந்த பிரிவில் இயக்கத் தொடக்கத்தினை மேற்கொள்ளலாம் என்று கணித்து மேற்கொள்ளும். பின்னர், புரோகிராமைக் கட்டுப்படுத்துவதனை, அந்த பிரிவில் உள்ள பூட் செக்டாருக்கு மாற்றிவிடும். பூட் செயல்பாட்டினை அது தொடர்ந்து எடுத்துக் கொள்ளும். டாஸ் மற்றும் விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில், FDISK/MBR என்ற கட்டளையுடன், MBR புரோகிராமினை நீங்கள் உருவாக்கலாம்.

இது குறித்து படிக்கையில், உங்கள் மனதில் MBR virus என்ற பெயர் நினைவிற்கு வரலாம். இந்த வைரஸ் ஒரு பொதுவான அபாயகரமான வைரஸ். மாஸ்டர் பூட் ரெகார்ட் புரோகிராமிற்குப் பதிலாக, தன் குறியீடுகள் அடங்கிய புரோகிராமினைப் பதிந்து வைக்கும். ஒவ்வொரு முறை கம்ப்யூட்டர் தொடங்கும்போதும் MBR செயல்படுத்தப் படுவதால், இது மிகவும் ஆபத்தான விளைவுகளைத் தரும். முன்பு இந்த வகை வைரஸ் மிகவும் அதிகமாகக் காணப்பட்டது. குறிப்பாக பிளாப்பி டிஸ்க் வழியாக இவை பரவின.

9. Task Switching (டாஸ்க் ஸ்விட்சிங்) பணி மாற்றம்: புரோகிராம் ஒன்றில் செயல் பட்டுக் கொண்டிருக்கையில், இன்னொரு புரோகிராமில் இயங்கும் பணியை மேற்கொள்ளும் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் சூழ்நிலையை இந்த சொற்கள் குறிக்கின்றன. டாஸ் சிஸ்டத்திலும் இந்த செயல்பாட்டினை மேற்கொள்ள பல பயன்பாடு புரோகிராம்கள் கிடைக்கின்றன. ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இது multitasking என்பதல்ல. Multitasking பணியில், சி.பி.யு. புரோகிராம்களுக் கிடையில், முன்னும் பின்னுமாக இயங்கி, அனைத்து புரோகிராம்களையும் ஒரே நேரத்தில் இயக்கும். எடுத்துக்காட்டாக, இணையத்தில் ஒரு தளத்தினை பார்த்து, அதன் பக்கத்தில் உள்ள தேவைப்பட்ட டெக்ஸ்ட்டை காப்பி செய்து, அடுத்த பக்கத்திற்கு செல்ல, அதற்கான லிங்க்கில் கிளிக் செய்கிறீர்கள். உடனே, டெக்ஸ்ட் எடிட்டர் ஒன்றைத் திறந்து, காப்பி செய்த டெக்ஸ்ட்டை பேஸ்ட் செய்கிறீர்கள். பேஸ்ட் செய்திடும் நேரத்தில், உங்கள் பிரவுசர், பார்க்கப்பட்டுக் கொண்டிருக் கும் தளத்தின் அடுத்த பக்கத்தைத் திறக்க முயற்சி எடுத்துத் திறக்கும்.

Task Switching பணியில் சி.பி.யு. முன்னும் பின்னுமாக அடுத்தடுத்த புரோகிராம்களில் இயங்குவதில்லை. ஒரு நேரத்தில் ஒரே ஒரு புரோகிராமினை மட்டுமே இயக்கும். ஆனால், மாற்றத்தினை மிக அழகாக எடுத்துக் கொடுக்கும். இதனைச் சில வேளைகளில் context switching என்றும் அழைக்கின்றனர்.

விளையாடிப் பாருங்கள்

1. COM என்ற பெயரில் போல்டர் ஒன்றை உருவாக்கிப் பாருங்கள். விண்டோஸ் ஏற்றுக் கொள்ளாது. ஏன்? என்ன காரணம்? அது சிஸ்டத்தில் பயன்படுத்தப்படும் சொல் என்பதாலா? மைக்ரோசாப்ட் அலுவலர்களால் உறுதியாகப் பதில் சொல்ல முடியவில்லை.

2. விண்டோஸ் பயன்படுத்து கிறீர்களா! அதனுடன் சிஸ்டம் புரோகி ராமாகத் தரப்பட்டிருக்கும் நோட்பேட் புரோகிராமினைத் திறக்கவும். அதில் “Bush hid the facts” என்று (மேற்கோள் குறிகள் இல்லாமல்) டைப் செய்திடவும். பின் அந்த பைலை ஏதேனும் ஒரு பெயரில் சேவ் செய்திடவும். பின்னர் இந்த பைலை மீண்டும் திறந்து பார்க்கவும். இப்போது நீங்கள் டைப் செய்த டெக்ஸ்ட்டைப் படிக்க முடிகிறதா? இல்லை என்றால் காரணத்தைச் சொல்லுங்கள்.

3. மைக்ரோசாப்ட் வேர்ட் தொகுப்பினைத் திறந்து கொள்ளுங்கள். பின் முதல் வரியில் =rand (10, 9) என டைப் செய்திடவும். இந்த வரியை டைப் செய்து என்டர் தட்டி கீழே வரவும். என்ன நடக்கிறது என்று பார்க்கவும்.

வேர்ட் டிப்ஸ்

டாகுமெண்ட்டில் எழுத்தைப் பதிக்க

நீங்கள் தயாரித்த டாகுமெண்ட் ஒன்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினால், டாகுமெண்ட்டில் உள்ள எழுத்து வகையினை, வேறு ஒரு கம்ப்யூட்டரில், மற்றவர்களால் பயன் படுத்தப்பட நீங்கள் விரும்பினால், டாகுமெண்ட்டில் அவற்றைப் பதிக்க வேண்டும். இதனை ஆங்கிலத்தில் embed என்று சொல்வார்கள். நாம் உருவாக்கிய டாகுமெண்ட்டில் பயன்படுத்தப்பட்ட எழுத்து வகை, இன்னொரு கம்ப்யூட்டரில் இல்லை என்றால், விண்டோஸ் அதற்கு இணையாக உள்ள வேறு ஒரு எழுத்தினைப் பயன்படுத்தும்.

ஆனால், நீங்கள் எதிர்பார்த்த தாக்கத்தினை டாகுமெண்ட் ஏற்படுத்தாது. இதற்கான தீர்வு டாகுமெண்ட்டில் அவற்றைப் பதிப்பதே. எப்படி இதனை மேற்கொள்ளலாம் என்று பார்க்கலாம். வேர்ட் 2007க்கு முந்தைய வேர்ட் புரோகிராமினை நீங்கள் பயன்படுத்து பவராக இருந்தால், கீழே குறிப்பிட்டுள்ள செட்டிங்ஸை ஏற்படுத்தவும்.

1. Tools மெனுவிலிருந்து Options பிரிவினைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் Options dialog box –ஐக் காட்டும்.

2. இங்கு காட்டப்படும் விண்டோவில் உள்ள Save டேப்களில் டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும்.

3. இப்போது கிடைக்கும் கட்டத்தில் உள்ள பல பிரிவுகளில் Embed TrueType Fonts என்று இருப்பதன் முன் உள்ள செக் பாக்ஸில் டிக் அடையாளத்தினை ஏற்படுத்தவும்.

4. ஒருகுறிப்பிட்ட எழுத்து வகையில் சில கேரக்டர்களை மட்டுமே பயன்படுத்துவதாக இருந்தால், Embed Characters In Use Only என்ற வரியின் முன் டிக் அடையாளத்தினை ஏற்படுத் தவும்.

5. டாகுமெண்ட்டில் இடத்தினை சேவ் செய்திட, Do Not Embed Common System Fonts என்பதில் டிக் அடையாளம் ஏற்படுத்தவும்.

6. பின்னர் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

7. வழக்கம்போல டாகுமெண்ட்டை உருவாக்கி சேவ் செய்திடவும்.

நீங்கள் வேர்ட் 2007 தொகுப்பினைப் பயன்படுத்துபவராக இருந்தால், கீழே தரப்பட்டுள்ள வழிகளைப் பின்பற்றவும்.

1. Office பட்டன் கிளிக் செய்து, பின்னர் Word Options என்பதில் கிளிக் செய்திடவும். வேர்ட், Word Options என்ற டயலாக் பாக்ஸினைக் காட்டும்.

2. டயலாக் பாக்ஸின் இடது பக்கம் Save என்பதில் கிளிக் செய்திடவும்.

3 .

Embed Fonts in the File என்ற செக் பாக்ஸில் டிக் அடையாளத்தினை ஏற்படுத்தவும்.

4. நீங்கள் குறைந்த அளவில் கேரக்டர்களைப் பயன்படுத்துபவராக இருந்தால், Embed Only the Characters Used in the Document என்ற பாக்ஸில் டிக் செய்திடவும்.

5. டாகுமெண்ட்டில் இடத்தினை சேவ் செய்திட, Do Not Embed Common System Fonts என்பதில் டிக் அடையாளம் ஏற்படுத்தவும்.

6. பின்னர் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

7. வழக்கம்போல டாகுமெண்ட்டை உருவாக்கி சேவ் செய்திடவும்.

ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு எழுத்து வகைகளை எம்பெட் செய்கிறீர்களோ, அந்த அளவிற்கு பைலின் அளவு பெரியதாகும். மேலும் அனைத்து டி.டி.எப். எழுத்து வகைகளையும் எம்பெட் செய்திட முடியாது. சில எழுத்து வகைகளை உருவாக்கியவர்களே, அவற்றை எம்பெட் செய்திட இயலா வகையில் அமைத்திருப்பார்கள்.

மெனு செல்லாமல் பாண்ட் டயலாக் பாக்ஸ்

வேர்ட் டாகுமெண்ட் தயாரிக்கையில், அவசரமாக டெக்ஸ்ட்டின் ஒரு பகுதியைக் குறிப்பிட்ட வகையில் பார்மட் செய்திட வேண்டியதிருந்தால், மெனு பார் சென்று Format கிளிக் செய்து பின்னர், Font தேர்ந்தெடுக்கிறோம். பின்னர், நமக்கு பாண்ட் டயலாக் பாக்ஸ் கிடைக்கும். இதில் டெக்ஸ்ட் பார்மட் செய்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் தரப்பட்டிருக்கும். இது சற்று நேரம் எடுக்கும் வேலை ஆகும்.

ஒரு சில சொற்கள் அல்லது வரிகளில், ஏதேனும் பார்மட்டிங் வேலையை மேற்கொள்ள கீழ்க்காணும் வகையில் செயல்படலாம். முதலில் பார்மட் செய்யப்பட வேண்டிய டெக்ஸ்ட்டைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். பின்னர், அந்த பகுதியில், மவுஸ் கர்சரைக் கொண்டு, ரைட் கிளிக் செய்திடுங்கள். கிடைக்கும் மெனுவில், Font கிளிக் செய்தால் Font Dialogue Box கிடைக்கும். தேவையான பார்மட்டிங் பணியை நிறைவு செய்திடுங்கள். இறுதியில் ஓகே கிளிக் செய்து முடிக்கவும்.

குறிப்பிட்ட அகலத்திலான செல்களுடன் டேபிள்

வேர்டில் டேபிள் உருவாக்குவது எளிது. டேபிள் ஒன்றை இன்ஸெர்ட் கட்டளை கொடுத்து அமைக்கையில், செல் ஒன்றின் அகலம், கிடைக்கும் மார்ஜின் நீளத்தை, சரி சமமாக, நாம் அமைக்கும் செல்களின் எண்ணிக்கைக் கேற்றபடி அமைக்கப்படும். சில வேளைகளில், முதல் இரண்டு செல்கள் அல்லது மற்ற செல்கள் சிலவற்றில் அதிக அகலம் தேவைப்படலாம். எடுத்துக் காட்டாக, மார்ஜின் வெளியின் முழு நீளத்தில், 12 செல்கள் அடங்கிய ஒரு டேபிள் அமைக்கிறீர்கள். இதில் முதல் இரண்டு செல்கள்,சற்று அதிக அகலத்திலும், மற்ற 10 செல்கள் சரி சமமான அகலத்திலும் அமைக்கப்பட வேண்டும் என விரும்புகிறீர்கள். இதற்கான வழிமுறையைப் பார்ப்போமா!

1. முதலில் ஒரு படுக்கை வரிசை (one-row), மூன்று செல்கள் உள்ள டேபிள் ஒன்றை அமைக்கவும். இது மார்ஜின் வெளியில், இடது மூலையிலிருந்து வலது மூலை வரை,சரி சமமான அளவிலான செல்களுடன் அமைக்கப்படும்.

2. அடுத்து, முதல் இரண்டு செல்களில், கர்சரைக் கொண்டு சென்று, தலைப்பில் உள்ள செல் பார்டரை இழுத்து, தேவையான அகலத்தில் அமைக்கவும்.

3. அடுத்து மூன்றாவதாக உள்ள செல்லின் உள்ளாகக் கர்சரைக் கொண்டு சென்று வைக்கவும்.

4. பின்னர், டேபிள் மெனுவை விரித்து, அதில் Split Cells என்ற பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் இங்கு Split Cells என்ற டயலாக் பாக்ஸைக் காட்டும்.

5. அடுத்து Number of Columns என்ற கண்ட்ரோலைப் பயன்படுத்தவும். அதில் இந்த செல் பத்து செல்களாகப் பிரிக்கப் பட வேண்டும் எனக் கொடுக்கவும்.

6. அடுத்து ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

இரு பக்க ஒழுங்கு பாரா பிரச்னை

டாகுமெண்ட் தயாரிக்கையில், இரண்டு ஓர மார்ஜின் அளவிலும், வரிகள் சரி சமமாக அமையும் படி (justified)

"கவனத்திற்கு"

ஆஸ்பெக்ட் ரேஷியோ (Aspect Ratio): ஒரு டிவியின் அல்லது மானிட்டரின் திரையின் அகல உயர விகிதத்தை ஆஸ்பெக்ட் ரேஷியோ என்கிறோம். வழக்கமான டிவிக்களின் திரை 4:3 என்ற விகிதத்தில் அமைந்திருக்கும். அதாவது 4 பங்கு அகலம் 3 பங்கு உயரம். தற்போது வருகின்ற புதிய ஸ்கிரீன்கள் 16:9 என்ற விகிதத்தில் அமைக்கப்படுகின்றன.

நீங்கள் அமைத்திருந்தால், நாமாக ஒரு புதிய வரி அமைக்க என்டர் + ஷிப்ட் அழுத்துகையில், சில சொற்களுக் கிடையே தேவையற்ற வகையிலும், பார்க்க சரியற்ற வகையிலும், சொற்கள் மற்றும் கேரக்டர்கள் பிரிக்கப்படு வதனைப் பார்க்கலாம். இந்தப் பிரச்னையை ஒரு மாய டேப் பயன்படுத்தித் தவிர்க்கலாம்.

இரு மார்ஜின் ஓரங்களிலும் சரி சம இணையாக பத்தி அமைய வேண்டும் என விரும்பி, தொடர்ந்து டைப் செய்து பத்தியை அமைப்போம். ஏதேனும் ஓரிடத்தில், பாரா முடிவுறச் செய்து, அடுத்த வரியினை அமைக்க வேண்டும் என எண்ணினால், நாமாக கண்ட்ரோல் + என்டர் தட்டுவோம். அப்போது, அதற்கு முன் உள்ள வரிகளில் உள்ள சொற்கள், வலது மார்ஜின் வரை வலுக்கட்டாயமாக இழுக்கப்படும். சொற்களில் எழுத்து சிதறியது போல இருக்கும். டாகுமெண்ட்டின் தோற்றத்தினை இது கெடுக்கும்.

இதனைத் தவிர்க்க, நாமாக வரி ஒன்றை அமைக்கும் முன்னர், ஒரு டேப் கேரக்டர் தட்டவும். அவ்வாறு செய்கையில், வேர்ட் அந்த வரியை மட்டும், இடது மார்ஜின் பக்கம் மட்டும் சீராக இருக்குமாறு அமைத்திடும். வலது மார்ஜின் பக்கம் எந்த விளைவினையும் ஏற்படுத்தாது.

"கவனத்திற்கு"

பூட் டிஸ்க் (Boot Disk): கம்ப்யூட்டர் ஒன்றை இயக்கத் தேவையான சிஸ்டம் பைல்களைக் கொண்ட, கம்ப்யூட்டர் ஆப்பரேட்டிங் சிஸ்டம் கொண்ட, சிடி அல்லது டிவிடி. பொதுவாக, கம்ப்யூட்டரின் ஹார்ட் டிஸ்க் தான், பூட் டிஸ்க்காக இருக்கும். இதில் பிரச்னை ஏற்படுகையில், சிஸ்டம் பைல்கள் கொண்ட பூட் டிஸ்க் மூலம் கம்ப்யூட்டரை இயக்குகிறோம்.

வேர்ட்: ஆல்ட் கீ பயன்பாடு

Alt V, H – ஹெடரில் உள்ளதனைப் பார்க்க. பேஜ் லே அவுட் வியூவில் ஹெடரைக் காட்டும்

Alt, V, N– இது சாதாரணமான (Normal) அடிப்படைத் தோற்றத்தைக் காட்டும். இதே செயல்பாடு Alt + Ctrl + N என்ற கீகளை அழுத்துகையிலும் கிடைக்கும்.

Alt, V, O – அவுட் லைன் தோற்றத்தைக் கொடுக்கும். இதே செயல்பாடு Alt + Ctrl + O என்ற கீகளை அழுத்தினாலும் கிடைக்கும்.

Alt , V, P– ஏறத்தாழ அச்சில் என்ன தோற்றம் கிடைக்குமோ அதே போல தோற்றத்தைக் கொடுக்கும். இதனை எடிட் செய்யலாம். Alt + Ctrl +P என்ற கீகளை அழுத்தினாலும் இதே செயல்பாடு கிடைக்கும்.

Alt, W, A– ஒன்றுக்கு மேற்பட்ட ஆவணங்களைத் திறந்து செயல்படுகை யில் அவற்றை ஒழுங்குபடுத்தி திரையில் காட்சி தெரியும் படி அமைக்க இந்த கீகளைப் பயன்படுத்தலாம்.

எழுத்து தொடர்பான ஷார்ட்கட் கீகள்

எழுத்தை மாற்ற CTRL+SHIFT+F
எழுத்தின் அளவை மாற்ற CTRL+SHIFT+P
எழுத்தின் அளவை அதிகப்படுத்த CTRL+SHIFT+>
எழுத்தின் அளவைக் குறைக்க CTRL+SHIFT+<
எழுத்தின் அளவை ஒரு புள்ளி கூட்ட CTRL+]
எழுத்தின் அளவை ஒரு புள்ளி குறைக்க CTRL+[
பெரிய சிறிய எழுத்தாக மாற்ற SHIFT+F3
அனைத்தும் பெரிய எழுத்துக்களாக மாற்ற CTRL+SHIFT+A
எழுத்தை போல்ட் செய்திடவும் மாற்றவும் CTRL+B
அடிக்கோடினை அமைக்க, நீக்க CTRL+U
ஒரு சொல்லை அடிக்கோடிட CTRL+SHIFT+W
சாய்வெழுத்து அமைக்க / நீக்க CTRL+I
எழுத்தை சிறிய கேபிடல் எழுத்தாக அமைக்க CTRL+SHIFT+K
தொகுப்பை மூட ALT+F4
அனைத்து விண்டோவினையும் சுருக்கி வைக்க W logo key+M
டெக்ஸ்ட் இரு கோடுகளில் அடிக்கோடிட CTRL+SHIFT+D
டெக்ஸ்ட்டை மறைக்க மீண்டும் கொண்டு வர CTRL+SHIFT+H
பைல் போல்டர் கண்டுபிடிக்க WINDOWS+F
ஆட்டோமேடிக் ஸ்பேஸிங் அமைக்க CTRL+=
தற்போதைய வேலையை நீக்க உகுஇ
சிம்பல்(அடையாளக் குறி) எழுத்துக்கு மாற CTRL+SHIFT+Q
அச்சில் வராத குறிகளைக் காண CTRL+SHIFT+*

பட்ஜெட் விலையில் டேப்ளட் பிசி

டேப்ளட் பிசி பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதால், பல நிறுவனங்கள், இந்தியாவில் முதலிலேயே கால் ஊன்ற முயற்சிகளை எடுத்து வருகின்றன. அந்த



வகையில் எச்.சி.எல். நிறுவனம் அண்மையில் மூன்று புதிய "Me" டேப்ளட் பிசிக்களை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றின் விலை ரூ.14,990 லிருந்து ரூ.32,990 வரை உள்ளன. பட்ஜெட் விலையில் இதன் தொடக்க நிலை டேப்ளட் பிசி இருப்பதால், இதனை வாங்கிப் பரீட்சார்த்தமாகப் பயன்படுத்த எண்ணுபவர்கள் தயக்கமின்றி வாங்க எண்ணுவார்கள்.

இவற்றில் விலை குறைந்தது HCL Me AE7-A1 என்ற டேப்ளட் பிசி ஆகும். ஏழு அங்குல ரெசிஸ்டிவ் டச் ஸ்கிரீன், 800x 480 பிக்ஸெல் ரெசல்யூசனில் தரப்பட்டுள்ளது. ஆண்ட்ராய்ட் 2.2 ப்ரையோ ஆப்பரேட்டிங் சிஸ்டம் செயல்படுகிறது. இதன் ராம் மெமரி 256 எம்.பி. இதன் பிளாஷ் மெமரி 2 ஜிபி. மைக்ரோ எஸ்.டி.கார்ட் போர்ட் தரப்பட்டுள்ளது. வை-பி, புளூடூத், 0.3 மெகா பிக்ஸெல் கேமரா, ஜி.பி.எஸ். ரிசீவர், 2400 mAh திறன் உள்ள பேட்டரி. 3.5 மிமீ ஆடியோ ஸ்டீரியோ ஜாக் ஆகியன உள்ளன. மெமரியினை 8 ஜிபி வரை அதிகப்படுத்தலாம். இதன் எடை 400 கிராம் மட்டுமே.

மேலே சொல்லப்பட்ட மூன்றில், சிறந்தது எனப் பலராலும் கருதப்படுவது HCL Me AM7-A1 டேப்ளட் பிசியாகும். கேலக்ஸி டேப் டேப்ளட் பிசியின் விலையை ஒட்டி ரூ.22,990 என இது விலையிடப்பட்டுள்ளது. ஏழு அங்குல கெபாசிடிவ் டச் ஸ்கிரீன் 1024x600 பிக்ஸெல் ரெசல்யூசனில் தரப்பட்டுள் ளது. 800 மெஹா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் ப்ராசசர் செயல்படுகிறது. இதன் உள் நினைவகம் 512 எம்பி ராம். 8 ஜிபி கொள்ளளவு உள்ளது. மைக்ரோ எஸ்.டி. கார்ட் சப்போர்ட் தரப்பட்டுள்ளது. வை-பி, புளூடூத், 3ஜி தொழில் நுட்ப வசதிகள் கிடைக்கின்றன. இவற்றுடன் GPS with A-GPS சப்போர்ட் தரப்படுகிறது. ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஆண்ட்ராய்ட் ப்ரையோ 2.2 இயங்குகிறது. ஹை டெபனிஷின் வீடியோ இயக்கம் இதில் கிடைக்கிறது. இதன் பேட்டரி திறன் 4200 mAh.

HCL Me AP10-A1 டேப்ளட் பிசி, இந்த மூன்றில் விலை கூடுதலானதும், பெரிய அளவிலானதுமாகும். 10 அங்குல கெபாசிடிவ் டச் ஸ்கிரீன் திரை உள்ளது. இதில் இயங்கும் Cortex A9 ப்ராசசர் 1 கிஹா ஹெர்ட்ஸ் வேகத்தில் செயல் படுகிறது. இதன் ராம் மெமரி 1ஜிபி. உள் கொள்ளளவும் 16 ஜி.பி. மைக்ரோ எஸ்.டி.கார்ட் சப்போர்ட்டும் கிடைக் கிறது. வை-பி, புளூடூத், 3ஜி தொழில் நுட்ப வசதிகள் கிடைக்கின்றன. இவற்றுடன் GPS with A-GPS சப்போர்ட் தரப்படுகிறது. 1.3 மெகா பிக்ஸெல் கேமரா இணைக்கப்பட்டுள்ளது. 3650 mAh திறன் உள்ள பேட்டரி அதிக நேரம் பவர் தருகிறது. ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஆண்ட்ராய்ட் 2.2 ப்ரையோ. இதன் அதிக பட்ச விலை ரூ.32,990. இவற்றை http://www.hclstore.in/ME_tablet என்ற முகவரியில் இயங்கும் இணைய தளம் மூலம் வாங்கிக் கொள்ளலாம்.

அன்றும் இன்றும்

அப்ளிகேஷன் என்பது அன்று வேலை தேடுவதற்கான விண்ணப்பம். இன்று கம்ப்யூட்டரில் குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள இயங்கும் புரோகிராம்.

விண்டோஸ் என்பது நாம் சுத்தம் செய்ய அலுத்துக் கொள்ளும் வீட்டின் ஒரு பகுதி. இன்று உலகை இணைக்கும் ஒரு பாலம்.

கர்சர் என்பது புனிதமல்லாத தெய்வ நிந்தனை கொண்ட ஒரு சமாச்சாரம். இன்று கம்ப்யூட்டரில் நம் கட்டளைக்குக் கண் சிமிட்டும் ஒரு கோல் போஸ்ட்.

கீ போர்ட் என்பது அன்று ஒரு பியானோ. இன்று நம் விரல்களுடன் பாட்டுப் பாடும் ஒரு சாதனம்.

மெமரி என்பது வயதாகும் போது நம்மிடம் தேயும் ஒரு ஆற்றல். இன்று கம்ப்யூட்டரின் இயக்கங்களுக்கு ஒரு தளம்.

சி.டி. அன்று ஒரு பேங்க் அக்கவுண்ட். இன்று பயன்படுத்தப் பட்ட பிறகும் வீணாகிப் போனால் ஆட்டோக்களிலும் சைக்கிள்களிலும் அழகுக்கு மாட்டப்படும் ஒரு தட்டு.

பொது இடத்தில் அன்ஸிப் செய்தால் அன்று உதைப்பார்கள். இன்று அன்ஸிப் செய்வதனை எல்லாரும் பார்க்கலாம்.

அன்று குப்பைகளைத் தான் கம்ப்ரஸ் செய்வார்கள். இன்று எளிதாகத் தகவல்களைத் தூக்கிச் செல்ல கம்ப்ரஸ் செய்கிறோம்.

எலி வாழும் இடம் தான் அன்று மவுஸ் பேட். இன்று நம் கரங்களில் தவழும் கம்ப்யூட்டர் குழந்தைக்கான படுக்கை.

கத்தரிக்கோல் வைத்துத் தான் அன்று கட் செய்தோம். இன்று இரண்டு கிளிக் செய்தே வெட்டுகிறோம்.

பல் தேய்க்கத்தான் அன்று பேஸ்ட். இன்று கையில் தொடாமலேயே நிறைய கம்ப்யூட்டரில் ஒட்டுகிறோம்.

எட்டுக்கால் பூச்சியில் மாளிகை தான் அன்று வெப். இன்று உலகைச் சுற்றி பின்னப்பட்ட டிஜிட்டல் வலையே வெப்.

காய்ச்சலை வந்தால் காரணம் வைரஸ். இன்று அடுத்தவனைக் கெடுக்கும் புரோகிராமே வைரஸ்.

எக்ஸெல்: வாட்ச் விண்டோ

பார்முலாக்களைப் பயன்படுத்துவது எக்ஸெல் ஸ்ப்ரெட் ஷீட்டில் ஓர் அத்தியாவசிய செயல்பாடாகும். பார்முலாக்கள் அதிகமாகும்போது எந்த பார்முலா, எந்த செல்களையெல்லாம் இயக்கும் என்பதனைப் பல வேளைகளில் நம் நினைவில் வைத்துக் கொள்ள இயலாமல் போய்விடும். சில வேளைகளில் செல்களில் மதிப்புகளைத் தருகையில் இந்த பார்முலாக்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் கணக்குகளை மேற்கொண்டு முடிவு களை செல்களில் அமைக்கும்படி ஏற்பாடு செய்திருப்போம். இதனால் புதிய பார்முலாக்கள் அமைக்கையில் அவை தொடர்பு டைய செல்களில் சரியாகச் செயலாற்றி விடைகளைத் தருகிறதா என்பதைக் கண் காணிக்க பல இடங்களில் உள்ள செல்களுக்குச் சென்று பார்க்க வேண்டியதிருக்கும். சில நேரங்களில் தவறான செல்களைப் பார்த்து தவறான தகவல்கள் மற்றும் பார்முலாக்களைத் தரும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. இவற்றைத் தவிர்க்க எக்ஸெல் தொகுப்பு தரும் வசதி தான் எக்ஸெல் வாட்ச் விண்டோ.

அடுத்தடுத்து எக்ஸெல் பார்முலாக்கள் கணக்கிடுவதனைக் கண்காணிக்க நமக்குக் கிடைத்திருக்கும் வசதிதான் வாட்ச் விண்டோ. நாம் செல்களின் மதிப்பை மாற்றும்போதெல்லாம் சம்பந்தப்பட்ட செல்களில் என்ன மாறுதல்கள் ஏற்படுகிறது என்று நமக்குக் காட்டும் ஜன்னல் தான் இந்த வாட்ச் விண்டோ. இதனால் நாம் ஒவ்வொரு செல்லுக்கும் தாவிச் சென்று கண்காணிக்கும் வேலை மிச்சமாகிறது. இந்த வாட்ச் விண்டோவினை அமைத்திட முதலில் Tools மெனு சென்று அதில் துணை மெனுவான Formula Auditing என்பதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின் அதில் உள்ள Show Watch Window என்பதனைக் கிளிக் செய்திட வேண்டும். Formula Auditing விண்டோவில் கண் கண்ணாடி படத்துடன் உள்ள சிறிய பிரிவுதான் Watch Window. இதனை கிளிக் செய்தவுடன் நமக்கு வாட்ச் விண்டோ கிடைக்கும். இப்போது எந்த செல்லில் உள்ள பார்முலா செயல்படுவதனைக் கவனிக்க விரும்புகிறீர்களோ அதனைத் தேர்ந்தெடுத்து Add Watch என்னும் பட்டனை அழுத்த வேண்டும். இப்போது வாட்ச் விண்டோவில் பார்முலா சம்பந்தப்பட்ட செல்கள் அவற்றின் மதிப்பு, கணக்கிடப்பட்ட விடை ஆகியவை தெரியும். இதே போல எந்த பார்முலாக்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க விரும்புகிறீர்களோ அவற்றை வரிசையாகத் தேர்ந்தெடுத்து Add பட்டனை அழுத்தினால் அவை அனைத்தும் Watch விண்டோவில் சேர்க்கப்படும். இந்த விண்டோனை மானிட்டரின் எந்த மூலையிலும் வைத்துக் கொள்ளலாம். இனி செல்களில் மதிப்புகளை மாற்றும் போதெல்லாம் இந்த பார்முலாக்கள் மூலம் எந்த செல்களில் மதிப்புகள் மாறுகின்றன என்று இந்த ஒரே விண்டோவில் கண்காணிக்கலாம். ஏதாவது ஒரு பார்முலா செயல்படுவதனைக் கண்காணிக்க விரும்ப வில்லை என்றால் அதனை மட்டும் தேர்ந்தெடுத்து Delete Watch button ஐ அழுத்தி நீக்கிவிட்டு மற்ற பார்முலாக்களின் செயல் பாடுகளைக் கண்காணிக்கலாம். ஒவ்வொரு செல்லுக் காய் மவுஸ் மூலம் ஓடி ஓடிப் பார்ப்பதனைத் தவிர்த்து ஒரே ஜன்னலில் அனைத்தையும் கண் காணிப்பது எவ்வளவு எளிது பாருங்கள்.

கம்ப்யூட்டருக்குப் புதியவரா?

கம்ப்யூட்டருக்குள் ஒரு திறனாய்வு

சென்னை வாசகர் ஒருவர் சி சாப்ட் சான்ட்ரா என்னும் தொகுப்பு குறித்து கேள்வி ஒன்றை அனுப்பி இருந்தார். அவரின் நீண்ட கடிதத்தில் கேட்கப் பட்டுள்ள சந்தேகங்களுக்கான பதிலை இந்த சிறிய குறிப்பில் தருகிறேன். அவர் கடிதத்தின் மையவினா, கம்ப்யூட்டர் ஒன்றின் அனைத்து பாகங்கள், புரோகிராம்கள், சாதனங்கள் குறித்து ஒரே செயல்பாட்டில் எப்படி அறிந்து கொள்ளலாம் என்பதே. அது சாத்தியமா? என்றும் கேட்டிருக்கிறார்.

நாம் தினந்தோறும் கம்ப்யூட்டரைப் பயன்படுத்துகிறோம். ஆனால் பார்ப்பது எல்லாம் மானிட்டர் திரையைத்தான். உங்கள் கம்ப்யூட்டருக்குள் என்ன இருக்கிறது என்றாவது பார்த்திருக் கிறீர்களா? ஒரு சிலர் சிபியூ கேபினை மூடி வைத்த சிறிய பெட்டிக்குள் வைத்து இயக்குவார்கள். இயக்கும்போது மட்டும் அதனைத் திற்ந்து வைத்துக் கொள்வார் கள். எப்படி இருந்தாலும் அதன் வெளிப்புறத்தைத்தானே பார்க்கிறோம்.

சரி, கம்ப்யூட்டருக்குள் என்ன இருக்கப் போகிறது? மதர்போர்டு, ஹார்ட் டிஸ்க், டிரைவ்கள் மற்றும் இவற்றை இணைக்கும் கேபிள்கள். இவற்றைப் பார்த்துப் பெரிதாக என்ன தெரிந்து கொள்ளப்போகிறோம். நாம் அறிந்து கொள்ள வேண்டியது எல்லாம் நம் ஹார்ட் டிஸ்க் கொள்ளளவு என்ன? சிப்பின் தன்மை என்ன? அதன் சைக்கிள் ஸ்பீட் என்ன? ராம் எவ்வளவு? இன்னும் எத்தனை போர்ட் உள்ளன? எத்தனை சாதனங்களை இணைக்கலாம்? ஓ.எஸ். எத்தனாவது பதிப்பு? அதில் சர்வீஸ் பேக் என்ன இணைந்துள்ளது? என்பவற்றை அறிந்து கொள்வதில்தான் நன்மையே உள்ளது.

அடேயப்பா எத்தனை விஷயங்கள்! இவற்றை எல்லாம் எப்படி அறிந்து கொள்வது? ஒவ்வொன்றாய் தெரிந்து கொள்ள முயற்சித்தால் நேரம் எவ்வளவு செலவாகும்? இதற்கெல்லாம் ஒரு வழி தரும் வகையில் சில சாப்ட்வேர் தொகுப்புகள் இணையத்தில் கிடைக் கின்றன. அவற்றில் சிறந்ததாக இரண்டு தெரிய வந்தன. அவை குறித்த தகவல்களை இங்கு காணலாம்.

முதலாவதாக CPUID என்ற நிறுவனம் தயாரித்து வழங்கும் CPU-Z என்ற புரோகிராம். இது ஒரு டயாக்னஸ்டிக் புரோகிராம். அதாவது மேலே சொன்ன அனைத்து கம்ப்யூட்டர் பிரிவுகளையும் அலசி ஆராய்ந்து அதன் தன்மைகளை ஒரு டெக்ஸ்ட் பைலாகத் தரும் புரோகிராம். இதனை http://www.cpuid.com/cpuz.php என்ற தளத்தில் காணலாம். இதனை காப்பி செய்து உங்கள் கம்ப்யூட்டரில் நிறுவி இயக்கினால் கம்ப்யூட்டரில் உள்ள சிலிக்கான் பாகங்களின் இயல்பு அனைத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

CPU-Z புரோகிராமினைக் காட்டிலும் கூடுதல் திறன் கொண்ட புரோகிராம் ஒன்றினைக் காண முடிந்தது. அதன் பெயர் Sandra. இதனை வழங்குவது SiSoftware என்ற நிறுவனம். இது அடிப்படையில் இலவசமாய்க் கிடைக் கிறது. ஆனால் கூடுதல் தகவல்கள் பெற கட்டணம் செலுத்திப் பெறலாம். இலவசமாய்க் கிடைக்கும் புரோகிராமே நமக்குப் போதும். இது மேலே சொன்ன CPU-Z புரோகிராம் தரும் அனைத்து தகவல்களையும் தருவதுடன் கூடுதலாகச் சில தகவல்களையும் தருகிறது. கம்ப்யூட்டரின் பிரிவுகள் அனைத்தும் இன்னும் சிறப்பாகச் செயல்பட சில பரிந்துரைகளையும் தரும். இந்த புரோகிராமினை http://www.sisoftware.net என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து இலவசமாகப் பெறலாம்.

இந்த புரோகிராம்களைப் பயன்படுத்தி கிடைக்கும் தகவல்கள் நீண்ட குறிப்பாகப் பல பக்கங்களில் கிடைக்கும். பல விஷயங்கள் டெக்னிக்கலாக இருக்கும். இருப்பினும், அவற்றை அறிந்த ஒருவரின் துணையோடு உங்கள் கம்ப்யூட்டர் குறித்த விஷயங்களை அறிந்து கொள்ளலாம்.

எனவே கம்ப்யூட்டருக்குள் என்ன இருக்கிறது? என்ற கேள்வி மனதில் எழுந்தவுடன் ஸ்குரு டிரைவரை எடுத்துக் கொண்டு இறங்கிவிட வேண்டாம். மேலே சொன்ன சாப்ட்வேர் புரோகிராம் களை இறக்கிப் பதிந்து இயக்கிவிட்டு கைகளைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தாலே போதும்.

ஒரு சின்ன பெர்சனல் பிரேக்

நீங்கள் கொடுத்துள்ள ஆபீஸ் ஆட்டோ ரெகவர் குறிப்பு பயனுள்ளதாக இருக்கிறது. முழுமையாக டேட்டா நமக்குக் கிடைக்கும் வாய்ப்புஇல்லை என்றாலும், சற்று நம்பிக்கையுடன் பணியாற்ற முடிகிறது.

-ச.மு.பாரி, பொள்ளாச்சி.

''அபாய வழிகள்'' என நாம் எப்படி தவறு செய்கிறோம் எனச் சுட்டிக் காட்டியுள்ளீர்கள். இன்னும் பல வழிகளில் நமக்கு நாமே வினை தேடிக் கொள்கிறோம். தொடர்ந்து இது போல எச்சரிக்கை தகவல்களைத் தரவும்.

-என். சத்தியமூர்த்தி, விருதுநகர்.

இலவச இணைய தளப் பட்டியலில் மிகவும் பயனுள்ளதாக பிரீடேவர் கலக்ஷனைச் சொல்லலாம். தேடி எடுத்து விளக்கங்களோடு பட்டியல் தந்த உங்கள் துணை ஆசிரியருக்கு நன்றி.

-சீ. உலகநாதன், சென்னை.

கையில் இருக்கிறதைக் கொண்டு என்ன உணவுப் பண்டம் செய்திடலாம் என்ற புதிய வழியில் ரெசிபி கொடுக்கும் தளம் அருமை. நம் தென்னிந்திய உணவுக்கு மட்டும் ஒரு தளம் யாராவது அமைக்கலாம்.

-என்.கலைச் செல்வி, சின்னமனூர்.

மொபைல் குறித்த பொது விபரங்களைத் தந்தமைக்கு நன்றி. தண்ணீரில் மொபைல் போனை விடுவது அடிக்கடி நடக்கும் சமாச்சாரம். இதற்கான தீர்வுகளை ஒரு ஆசிரியரைப் போல விளக்கியுள்ளீர்கள்.

-டி.முஸ்தபா, கோவை.

புதிய கம்ப்யூட்டரில் விண்டோஸ் 7 இருந்ததால், வேறு வழியின்றி பயன்படுத்தி வருகிறோம். நீங்கள் தந்துள்ள பைல் நிர்வாக டிப்ஸ் மிக மிக உபயோகமாயுள்ளது. தொடர்ந்து விண்டோஸ் 7 டிப்ஸ் வாராவாராம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

-என். தர்மராஜன், விழுப்புரம்.

எக்ஸெல் பில் ஹேண்டில் சாதாரண டூல் என எண்ணி வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் இவ்வளவு விஷயங்கள் உள்ளன என்று விவரமாகக் காட்டியுள்ளீர்கள். எக்ஸெல் வேலையை எளிதாக்க தொடர்ந்து உதவவும்.

-ஐ. பொன்மலர், அருப்புக் கோட்டை.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரில் டேப் பிரிவியூ காட்சி நிறுத்தும் ஐடியா, எனக்கும் உதவியது. நன்றி. கேள்விக் கான பதில்கள் அனைத்தும் சிறிய கட்டுரைகளைப் போலத் தெளிவாகத் தரும் உங்களுக்கு பாராட்டுக்கள்.

-கி. பரந்தாமன், ஓய்வு பெற்ற ஆசிரியர், மதுரை.

மொபைல் மலர் என்று போட்டுவிட்டு குறைந்த அளவே எழுதுகிறீர்கள். ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு புதிய அம்சத்துடன் வரும் மொபைல் போன் குறித்து இன்னும் அதிகம் எழுதலாமே!

-எஸ். ஹேமா மூர்த்தி, சென்னை.

உங்களுடைய விண்டோஸ் 7 டிப்ஸ் படித்த பின்னரே, அதில் உள்ள பைல் லைப்ரேரியின் முழு பயனையும் தெரிந்து கொண்டேன். மைக்ரோசாப்ட் ஒவ்வொரு பயன்பாட்டிலும் நமக்கு கூடுதல் வசதிகளைத் தான் தரும் என்பதற்கு இது ஒரு உதாரணம். இந்த ஓ.எஸ். குறித்து நிறைய பிரசுரிக்கவும்.

-பேரா. ஆர்.கே. கிருஷ்ணன், கோயமுத்தூர்.

நாங்கள் தினந்தோறும் இமெயில் பயன் படுத்துகிறோம். இமெயில் அனுப்புவது, பெறுவது மற்றும் அந்த வேலையைச் சிறப்பாக மேற்கொள்வது குறித்த டிப்ஸ் நிறைய வழங்கவும்.

-எஸ். சஞ்சய் விஜயன், தேனி.

எக்ஸெல் டிப்ஸ்

செயல்படும் செல்லுக்குச் செல்ல

எக்ஸெல் ஒர்க் புக் ஒன்று மிகப் பெரியதாக இருந்தால், சில வேளைகளில் அதன் அடுத்த அடுத்த செல்களுக்கு, மானிட்டர் திரை அளவைத் தாண்டிச் செல்ல வேண்டிய திருக்கும். அப்போது எந்த செல்லில் நாம் கர்சரை வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருந் தோம் என்பது மறந்து போகும். கர்சர் அங்கு துடித்துக் கொண்டிருந்தாலும், திரை மேலும் கீழுமாகச் சென்றதால், எங்கு செயல்படும் அந்த செல் உள்ளது என்று அறியாமல், ஸ்குரோலிங் பார் அல்லது அம்புக் குறி கீகளை அழுத்தியவாறு தேடுவோம்.

இந்த பிரச்னைக்கு ஒரு சிறிய தீர்வு வழி ஒன்று உள்ளது. ஒன்றல்ல, இரண்டு வழிகள் உள்ளன. முதல் வழி சற்று சுற்றுவழி. உங்களுக்கு நீங்கள் இருந்த செல் அட்ரஸ் அல்லது அதன் பெயர் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்திருந்தால், [Ctrl]+G கீகளை அழுத்தி, பின்னர் செல் எண் அல்லது பெயர் டைப் செய்து என்டர் அழுத்த, அந்த செல் உங்களுக்குக் கிடைக்கும். ஆனால், நாம் பெரும்பாலும், செல்லின் எண் அல்லது பெயரை நினைவில் வைத்திருக்க மாட்டோம். அந்த சூழ்நிலையில், கண்ட்ரோல்+பேக் ஸ்பேஸ் அழுத்துங்கள். ஜில் என்று, நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்த செல்லுக்கு எடுத்துச் செல்லப்படுவீர்கள்.

இதனைச் செயல்படுத்த, நீங்கள் கர்சரை வைத்திருக்கும் செல், மானிட்டர் திரையில் இருக்கக் கூடாது. அப்போதுதான், அந்த செல் கிடைக்கும்படி, மானிட்டரில் திரைக் காட்சி மாற்றப்படும். கர்சர் இருக்கும் செல், மானிட்டர் திரையில் இருந்தால், நீங்கள் கண்ட்ரோல் மற்றும் பேக் ஸ்பேஸ் அழுத்துகையில், திரைக் காட்சி அப்படியே தான் இருக்கும். ஏனென்றால், அந்த செல் தான் உங்கள் முன் காட்டப்படுகிறதே.

எனவே இந்தக் கட்டளையினை சோதித்துப் பார்க்க விரும்பினால், செல் ஒன்றில் கர்சரை வைத்துவிட்டு, பின் ஸ்குரோல் பார் மூலம் அல்லது வேறு வழிகளில் சற்றுக் கீழாகச் செல்லுங்கள். அதன் பின் இந்தக் கட்டளை கொடுத்துப் பாருங்கள்.

எக்ஸெல் – ஆல்ட்+ஷிப்ட்

இங்கே எக்ஸெல் தொகுப்பில் ஆல்ட்+ஷிப்ட் கீகளுடன் பங்சன் கீகளை அழுத்தினால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளைப் பார்க்கலாம்

F1 +ALT+SHIFT : புதிய ஒர்க் ஷீட் ஒன்று திறக்கப்படும்.

F2 +ALT+SHIFT : அப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒர்க்புக் சேவ் செய்யப்படும்.

F3 +ALT+SHIFT : நெட்டு மற்றும் படுக்கை வரிசை லேபிள்கள் பயன்படுத்தி பெயர்களை உருவாக்கலாம்.

F6+ALT+SHIFT : ஒன்றுக்கு மேற்பட்ட ஒர்க்புக் விண்டோக்கள் திறக்கப்பட்டிருப் பின் தற்போதைய ஒர்க்புக்கிற்கு முந்தைய ஒர்க்புக் விண்டோ திறக்கப்படும்.

F9 +ALT+SHIFT : திறந்திருக்கும் அனைத்து ஒர்க்ஷீட்களிலும் அனைத்து ஒர்க் புக்குகளிலும் அனைத்து கால்குலேஷன் களும் செயல்படுத்தப்படும்.

F10 +ALT+SHIFT : ஸ்மார்ட் டேக்கிற்கான மெனு மற்றும் மெசேஜ் திறக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்மார்ட் டேக் திறக்கப்பட்டிருந்தால் அடுத்த டேக் சென்று அதற்கான மெனு மற்றும் மெசேஜ் திறக்கப்படும்.

F11 +ALT+SHIFT : மைக்ரோசாப்ட் ஸ்கிரிப் எடிட்டர் திறக்கப்படும்.

F12 +ALT+SHIFT : பிரிண்ட் டயலாக் பாக்ஸ் திறக்கப்படும்.

"கவனத்திற்கு"

அனலாக் (Analogue): எந்த ஒரு சிக்னல் தன் மதிப்பை அடிக்கடி மாற்றிக் கொள்கிறதோ, அது அனலாக் ஆகும். எடுத்துக் காட்டாக, ஒருவர் பேசுகையில் கிடைக்கும் சிக்னல்கள் அனலாக் சிக்னல்கள். அது தொடர்ந்து மாறுபட்டுக் கொண்டே உள்ளது. இவை டிஜிட்டல் சிக்னல்களிலிருந்து வேறுபடு கின்றன. டிஜிட்டல் சிக்னல்கள், நிலைத்த மதிப்புகளுக் கிடையே மாறுகின்றன. இதனை உணர, தொடர்ந்து வேகமாக நகரும் நொடி முள் கொண்ட கடிகாரத்தின் முகப் பக்கத்தினையும், டிக் டிக் என ஒவ்வொரு விநாடியாக நகரும் விநாடி முள் கொண்ட கடிகார த்தை யும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். முதலில் குறிப்பிட்டது அனலாக் சிக்னல் தருவதாகும். இரண்டாவது டிஜிட்டல் சிக்னல். இரண்டாவதாகச் சொன்னது, ஒவ்வொரு எண்ணாக, ஒரே மதிப்பில் மாறுகிறது.

டாகுமெண்ட் வியூவரில், வேர்ட், எக்ஸெல், பவர்பாய்ண்ட்

எஸ் 5260

சாம்சங் ஸ்டார் மொபைல்

என அழைக்கப்படும், சாம்சங் தயாரிப்பான ஸ்டார் ஸ்மார்ட் போன், தற்போது இந்தியாவில் விற்பனைக்கு வந்துள்ளது. முதலில் அறிமுகமான சாம்சங் ஸ்டார்-ஐ, சில மாதங்களில், ஒரு கோடி என்ற எண்ணிக்கையைத் தன் விற்பனையில் மேற்கொண்டதால், இந்த போன் மிகவும் பிரபலமடைந்தது. இதன் அடுத்த பதிப்பு இப்போது இந்தியாவில் அறிமுகமாகியுள்ளது.

இதில் ஆண்ட்ராய்ட் சிஸ்டம் இல்லை என்றாலும், வழக்கமான டச்விஸ் இன்டர்பேஸ் அமைக்கப்பட்டு, இயக்குவதற்கு எளிதான போனாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மூன்று அங்குல கெபாசிடிவ் டச் ஸ்கிரீன், வை-பி, A2DP இணைந்த புளூடூத் 3.0, நொடிக்கு 15 பிரேம்கள் விடியோ பதியும், 3.15 மெகா பிக்ஸெல் திறன் கொண்ட டிஜிட்டல் கேமரா, 30 எம்பி திறன்கொண்ட இதன் நினைவகத்தினை, 16 ஜிபி வரை அதிகப்படுத்தும் திறன், மைக்ரோ யு.எஸ்.பி. போர்ட், ஸ்மார்ட் டயலிங், அக்ஸிலரோ மீட்டர் சென்சார், ஆர்.டி.எஸ். கொண்ட ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ, 3.5 மிமீ ஆடியோ ஜாக் ஆகியவை இந்த மொபைல் போனின் குறிப்பிடத்தக்க அம்சங்களாக உள்ளன.

ஜி டாக், பேஸ்புக் சேட், யாஹூ இன்ஸ்டண்ட் மெசஞ்சர் ஆகியவற்றுக் கான ரெடிமேட் கீகளுடன், பல்வேறு வடிவமைப்பில் உள்ள மீடியா பைல்களை இயக்கும் திறனும் பெற்றுள்ளது. இதன் மற்றும் பி.டி.எப். பைல்களை இயக்கலாம்.

நான்கு பேண்ட் அலைவரிசைகளில், ஜி.பி.ஆர்.எஸ். மற்றும் எட்ஜ் தொழில் நுட்பங்களையும் கொண்டு இயங் குகிறது. 107.5 x 54 x 12.4 மிமீ என்ற பரிமாணத்தில், 94 கிராம் எடையில் இது அமைக்கப் பட்டுள்ளது. இதன் அதிக பட்ச விலை ரூ. 6,450 எனக் குறியிடப்பட்டுள்ளது.

அதிகம் விற்பனையாகும் மொபைல்கள்

மொபைல் சந்தையில், சுற்றி வந்தால், ஒவ்வொரு நிலையிலும், எந்த வகை மொபைல் போனை மக்கள் அதிகம் விரும்புகிறார்கள் என்று தெரியவரும். இந்த நிலைகளில் அதிகம் விற்பனை யாகும் போன்களையும் கண்டறியலாம். மார்ச் நான்காம் வாரத்தில், வெளியான தகவல்களின்படி கீழ்க்காணும் மொபைல் கள் மக்கள் மனதைக் கவர்ந்தவையாக, அதிக அளவில் விற்பனையாயின.

வேறு நிறுவனப் போன்களும், வேறு சில நகரங்களில் விற்பனையாகி யிருக்கலாம்.

1. எல்.ஜி. ஏ 165: இது ஒரு பார் டைப் போன். எடை 81 கிராம். 110 x 47.5 x 14.1 மிமீ என்ற அளவில் வடிவமைக்கப் பட்டது. ஒருமுறை சார்ஜ் செய்தால் 15 மணி நேரம் வரை பேசும் திறனை அளிக்கிறது. நான்கு அலைவரிசைகளில் இயங்குகிறது. 5.1 செமீ அளவில் திரை உள்ளது. 0.3 மெகா பிக்ஸெல் திறனுடன், 4 எக்ஸ் டிஜிட்டல் ஸூம் கொண்ட விஜிஏ கேமரா கிடைக்கிறது. இதன் மெமரி 3.9 எம்.பி. மைக்ரோ எஸ்.டி. கார்ட் மூலம் 2 ஜிபி வரை நினைவகத்திறனை அதிகப்படுத்தலாம். இரண்டு சிம்களை இயக்கலாம். எம்பி3 பிளேயர் மற்றும் எப்.எம். ரேடியோ தரப்பட்டுள்ளன. எஸ்.எம்.எஸ். மற்றும் எம்.எம்.எஸ். வசதிகளும் உள்ளன. இதன் அதிக பட்ச விலை ரூ. 2,590 எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஃஎஅ165

2. சாம்சங் இ 1172: இதுவும் ஒரு பார் டைப் போன். 72 கிராம் எடையில் 108.7 x 46.1x14.1 மிமீ என்ற அளவில் வடிவமைக்கப்பட்டது. ஒரு முறை சார்ஜ் செய்தால், 12 மணி நேரம் பேசலாம்.

இரண்டு அலைவரிசைகளில் இயங்குகிறது. 1.52 அங்குல அகலத்தில் திரை உள்ளது. போனின் மெமரி 1 எம்பி. இரண்டு சிம்களை இயக்கலாம். இதில் கேமரா இல்லை. எஸ்.எம்.எஸ். மட்டும் அனுப்பலாம். எம்பி3 பிளேயர் மற்றும் எப்.எம். ரேடியோ தரப்பட்டுள்ளன. இதனுடைய அதிக பட்ச விலை ரூ.1,250.

3. நோக்கியா சி5: அழகான மொபைல் ஒன்று வாங்க வேண்டும் எனத் திட்டமிடுபவர்களைக் கவர்ந்திழுக்கும் மொபைல் போனாக, நோக்கியா சி5 அமைந்துள்ளது. நோக்கியாவின் மொபைல் சர்வீஸ் மற்றும் பேஸ்புக் தொடர்புகளை இலவசமாகப் பெறும் வசதியுடன் தரப்பட்டிருப்பது இதன் இன்னொரு சிறப்பு. இதன் மெமரி 50 எம்பி. 16 ஜிபி வரை மெமரியை அதிகப்படுத்த முடியும். வெள்ளை மற்றும் லேசான கிரே நிறம் கலந்து, அம்சமாக இந்த போன் உள்ளது. சிம் ஒன்று மட்டுமே பயன்படுத்த முடியும். விஜிஏ வீடியோ அழைப்பு கேமரா ஒன்றும், வழக்கமான 3 எம்பி திறன் கொண்ட 2 எக்ஸ் ஸூம் வசதி கொண்ட கேமரா ஒன்றும் தரப்பட்டுள்ளன. 3ஜி வீடியோ அழைப்பு, வீடியோ பிளே பேக், வீடியோ பதிவு ஆகியவற்றை மேற்கொள்ளலாம். எஸ்.எம்.எஸ்., எம்.எம்.எஸ்., புஷ் மெயில், ஆகிய வசதிகள் கிடைக்கின்றன. எம்பி3 பிளேயர், ஆர்.டி.எஸ். இணைந்த ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ, A2DP இணைந்த புளூடூத் கொண்ட இந்த மொபைல் போன் சிம்பியன் சிஸ்டத்தில் இயங்குகிறது.

இதன் அதிக பட்ச விலை ரூ.7,200

கேள்வி பதில்

கேள்வி:

இன்ஸ்டால் செய்யப்பட்ட புரோகிராம்களை, முழுமையாக நீக்க என்ன செய்ய வேண்டும்?

-சே. திருமூர்த்தி, மதுரை.

பதில்: சில புரோகிராம்களில், அதனை நீக்குவதற்கான வழிகளையும் தந்திருப் பார்கள். ஆல் புரோகிராம்ஸ் சென்று, புரோகிராம் லிஸ்ட்டில் பார்த்தால், Uninstall என்று ஒரு பிரிவு இருக்கும். அதில் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் நீக்க விரும்புவதனை உறுதி செய்து, கேட்கும் கேள்விகளுக்கான பதில் தெரிவித்தால், கூடுமானவரை முழுமையாக நீக்கப்படும்.

கண்ட்ரோல் பேனல் சென்று, ஆட் / ரிமூவ் (Add or Remove) புரோகிராம் பட்டியலைப் பெற்று, அதில் நீக்க விரும்பும் புரோகிராமினைத் தேர்ந்தெடுத்து, Remove என்ற பட்டனை அழுத்தலாம். இந்த முறையில் முழுமையாக அது நீக்கப்படும் எனச் சொல்ல முடியாது. தொடர்பான சில சிறிய புரோகிராம்கள் தங்குவதுண்டு.

அடுத்ததாக, Revo Uninstaller என்பன போன்ற தர்ட் பார்ட்டி புரோகிராம்களின் உதவியை நாடலாம். இவை இன்ஸ்டால் செய்யப்பட்ட புரோகிராம்களை முழுமையாக நீக்கும்.

கேள்வி: தொழில் நுட்ப ரீதியாக மட்டுமின்றி, பல வேளைகளில், சாதாரணமான இரண்டு விஷயங்களுக் கிடையேயுள்ள வேறுபாடு சட்டெனத் தெரிவதில்லை. எடுத்துக் காட்டாக, ஜி.எஸ்.எம். மற்றும் சி.டி.எம்.ஏ. இந்த சூழ்நிலைகளில் நமக்கு உதவிடும் இணைய தளங்கள் ஏதேனும் உண்டா?

-டி. வித்யா சுந்தர், கோவை.

பதில்: உங்கள் தேவையை மனதில் கொண்டு இணையத்தில் உலா வந்த போது, மிகவும் ஆச்சரியமாக உங்கள் சந்தேகத்தின் பெயரிலேயே ஒரு தளம் இயங்குவது தெரிய வந்தது. இதன் பெயர் டிபரன்ஸ் பிட்வீன் டாட் காம். (differencebetween.com) இத்தளத்தின் முழு முகவரி http://www.differencebetween.com/.

இந்த தளம் சென்றவுடன், உங்களுக்கு விளக்கம் தேவைப்படும் பொருள் எந்த பிரிவில் உள்ளதோ, அந்த தலைப்பில் கிளிக் செய்து, பின்னர்

கிடைக்கும் மெனு சென்று பெறலாம். டெக்னாலஜி, பேஷன், சயின்ஸ் அண்ட் நேச்சர், பொதுவானவை, மக்கள், ஹெல்த், கல்வி எனப் பல பிரிவுகள் உள்ளன.

இதன் சிறப்பு, உங்களுக்கு நன்கு தெரிந்த இரண்டு விஷயங்களுக் கிடையேயான வேறுபாடு குறித்த உங்கள் குறிப்புகளையும் இதில் அப்லோட் செய்திடலாம்.

கேள்வி: வீட்டுக் கம்ப்யூட்டரில், எம்.எஸ். ஆபீஸ் 2007 புரோகிராம், விண்டோஸ் 7 ஓ.எஸ்.ஸில் பயன்படுத்துகிறேன். இதில் பி.டி.எப். பைல் தயாரிக்க முடியவில்லை. ஆனால் என் அலுவலகக் கம்ப்யூட்டரில் உள்ளது. ஏன்? இதனைக் கொண்டு வர என்ன செய்திட வேண்டும்?

-டி.முருகதாஸ், திருத்தங்கல்.

பதில்: கவலைப் பட வேண்டாம். வீட்டில் உள்ள ஆபீஸ் தொகுப்பில் பி.டி.எப். பைல் உருவாக்கும் வசதி அமைக்கப்படவில்லை எனத் தெரிகிறது. அதற்கான ஆட் ஆன் தொகுப்பு இன்ஸ்டால் ஆகாமல் இருக்கலாம். இதனைக் கொண்டு வர, உங்களுக்குத் தேவையானது 2007 Microsoft Office Add-in: Microsoft Save as PDF or XPS என்கிற ஆட் ஆன் தொகுப்பு. இதனை மைக்ரோசாப்ட் இணைய தளத்திலிருந்தே பெற்றுக் கொண்டு இன்ஸ்டால் செய்திடவும். அந்த தளம் சென்று, ஆட் ஆன் தொகுப்பு பெயர் கொடுத்துத் தேடிப் பெறவும். இதற்கு நீங்கள் கட்டணம் செலுத்திய ஆபீஸ் தொகுப்பினைப் பதிந்திருக்க வேண்டும். விண்டோஸ் 7 தொகுப்பும், நகல் தொகுப்பாக இருக்கக் கூடாது.

கேள்வி: எக்ஸெல் தொகுப்பில் எட்ஜ் என்றும் ரேஞ்ச் (டேட்டா ரேஞ்ச்) என்றும் சொல்லப்படும் இரண்டும் ஒன்றுதானே. ஏன் இரண்டு லேபிள் தருகிறோம். வேறுபாடு உண்டா?

-கே. பிரியா, சிவகாசி.

பதில்: இரண்டும் செல்கள் குறித்த சொற்கள் என்றாலும், வேறுபாடு உள்ளது. டேட்டா தரப்பட்டுள்ள கடைசி செல்லை ஆங்கிலத்தில் "edge" என்று அழைக்கிறோம். ஒரு டேட்டா ரேஞ்சில் (Data Range) இறுதியாக டேட்டாவைக் கொண்டிருக்கின்ற செல்லை இது குறிக்கிறது. டேட்டா ரேஞ்ச் என்பது தொடர்ச்சியாக டேட்டாவைக் கொண்டிருக்கின்ற செல்களாகும். ரேஞ்ச் என்பதன் முடிவில் ஒரு காலியான படுக்கை வரிசை அல்லது நெட்டு வரிசை இருக்கும். அதன் பின்னால் மேலும் ஒரு டேட்டா ரேஞ்ச் தொடங்கலாம்.

கேள்வி: என் கம்ப்யூட்டர்களில் ஒன்றில், பல ஆண்டுகளாக விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்தி வருகிறேன். தற்போது சிக்கல் வருமோ எனத் தெரிகிறது. எப்படி ரெஜிஸ்ட்ரி பேக் அப் எடுப்பது? பிரச்னை ஏற்பட்டால், பேக் அப் பைலை எப்படி திரும்ப அமைப்பது?

-கே. திலகராணி, விருதுநகர்.

பதில்: ரெஜிஸ்ட்ரியைத் திறந்து அதில் எடிட்டிங் வேலையை மேற்கொள்கை யில் சிக்கல் ஏற்பட்டால், இந்த பேக் அப் பயன்படும்.

Start /Run சென்று அங்கு கிடைக்கும் பாக்ஸில் regedit என டைப் செய்திடவும். அடுத்து File மெனு கிளிக் செய்து கிடைக்கும் பிரிவுகளில் Export என்பதில் கிளிக் செய்திடவும். அடுத்து கிடைக்கும் பாக்ஸில் இதனை சேவ் செய்திட ஒரு இடம் தேர்ந்தெடுத்து அதில் இந்த பைலுக்கு ஒரு பெயர் கொடுக்கவும். நீங்கள் அறிந்து கொள்ளும் வகையில் இந்த பெயர் இருக்க வேண்டும். அதாவது என்று இந்த பேக் அப் எடுத்தது என்பது போன்ற தகவலுடன் பெயர் இருப்பது நல்லது.

விண்டோஸ் சிஸ்டம் தானாக ஒரு ரெஜிஸ்ட்ரி பேக் அப் பைலை ஒவ்வொரு முறை நீங்கள் கம்ப்யூட்டரை மூடுகையில் உருவாக்குவது உங்களுக் குத் தெரியுமா? கம்ப்யூட்டரை மூடுகையில் ஒவ்வொரு முறையும் Windows is saving your settings என்று வருகிறது அல்லவா! அப்போது விண்டோஸ் ரெஜிஸ்ட்ரி பைலை சேவ் செய்கிறது. இருப்பினும் நாமும் சேவ் செய்வது நமக்கு நல்லது.

சரி, உங்கள் கேள்வியின் அடுத்த பகுதிக்கு வருவோம். பிரச்சினை ஏற்பட்டது என்றால் எப்படி இதனை மீண்டும் இயக்கத்திற்குக் கொண்டு வருவது என்று பார்க்கலாம்.

Registry Editorல் Registry மெனுவில் கிளிக் செய்திடுங்கள். அடுத்து உங்கள் பேக் அப்

பைலைச் சுட்டிக் காட்டுங்கள். அதன் பின் Import Registry என்பதில் கிளிக் செய்திடுங்கள். மீண்டும் கம்ப்யூட்டரை பூட் செய்திடுங்கள். சரியாகிவிடும். நீங்கள் வழக்கமாக பேக் அப் செய்திடும் பணியை ஒரு புரோகிராம் மூலம் மேற்கொள்ளும் வழக்கம் உள்ளவரா? கவலையே இல்லை. நீங்கள் அந்த புரோகிராமில் எந்த எந்த பைல்களை எல்லாம் தானாக பேக் அப் செய்திட வேண்டும் என ஒரு பட்டியல் தயாரித்து வைத்திருப்பீர்கள் அல்லவா? அதில் இதற்கான இரண்டு பைல்களையும் சேர்த்துவிடுங்கள். சேர்க்க வேண்டிய பைல்களின் பெயர்கள்: "User.dat" மற்றும் "System.dat".

கேள்வி: வைரஸ் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க, ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை, சர்வீஸ் பேக் கொண்டு அப்டேட் செய்யச் சொல்கிறீர்கள். அப்டேட் செய்வதற்கும், வைரஸ் அழிப்பதற்கும் என்ன சம்பந்தம்? அதற்கான ஆண்ட்டி வைரஸ் தொகுப்புகள் உள்ளனவே.

-சி. கனகராஜ், சென்னை

பதில்: அப்டேட் பைல் பயன்பாடு என்பது, வரும் முன் காப்பது. வந்தபின் மேற்கொள்ளும் வைத்தியமே ஆண்ட்டி வைரஸ் புரோகிராம் பயன்பாடு. பிரவுசரில் வைரஸ்கள் நுழையக் கூடிய இடங்கள் அவ்வப்போது கண்டுபிடிக்கப் பட்டு அவற்றைச் சரி செய்திட இந்த அப்டேட் புரோகிராம்கள் வழங்கப் படுகின்றன. எனவே அப்டேட் செய்யப்படாவிட்டால் அந்த குறைகள் உள்ள இடங்கள் வழியாக வைரஸ்கள் நுழைய வாய்ப்புகள் அதிகமாகின்றன. எனவே அப்டேட் செய்து வரும் முன் காத்துக் கொள்வது நல்லது தானே.

கேள்வி: வேர்ட் டாகுமெண்ட் தயாரிக்கையில், வரிகளில் இறுதியாக வரும் சொல்லினை, வேர்ட் புரோகிராம் ஹைபன் கொடுத்து அமைக்கிறது. இது எந்த அடிப்படையில் நடைபெறுகிறது? சொல் ஒன்றில் இத்தனை எழுத்துக்கள் இருந்தால் பிரிக்கலாம் என்று ஏதேனும் வரையறை உள்ளதா? இதனை எப்படி அறிந்து கொள்வது?

-கே. எஸ். தீபக் கிருஷ்ணன், திருப்பூர்.

பதில்: அருமையான கேள்வி. இந்த ஹைபன் தரும் முறையினை எவரும் இவ்வளவு ஊன்றி எண்ணிப் பார்த்தது இல்லை. வேர்ட் உங்கள் டாகுமெண்ட் டை ஹைபனேட் செய்திடுகையில், ஹைபனேட் செய்யப்படும் சொல்லில் எவ்வளவு பகுதியை முந்தைய வரியில் அமைக்க முடியும் என்று கணக்கிடுகிறது. இதற்காக ஹாட் ஸோன் அல்லது ஹைபனேஷன் ஸோன் என்பதைக் கணக்கிடுகிறது. ஒவ்வொரு வரியிலும் தேவைப்படும்போது இந்த ஹாட் ஸோன் வலது முனையில் கிடைக்கிறது. இந்த ஹாட் ஸோன் எந்த அளவில் இருக்க வேண்டும் என்பதனை செட் செய்திடலாம். அதாவது 0.25 அங்குலம் என வைத்துக் கொண்டால் அந்த அளவிற்குள் ஒரு சொல்லை ஹைபனேட் செய்திடமுடிந்தால் மட்டுமே, வேர்ட் ஒரு சொல்லை ஹைபனேட் செய்திடும். இல்லை



என்றால் அடுத்த வரிக்குக் கொண்டு வந்திடும். இதனை செட் செய்வதற்குக் கீழ்க்கண்ட வழிகளைப் பின்பற்றவும்.

மெனு பாரில் Tools அழுத்திப் பின் Language என்ற பிரிவில் கிளிக் செய்திடவும். இந்த சப் மெனுவில் Hyphenation என்ற பிரிவு இருக்கும் இதனைக் கிளிக் செய்தால் Hyphenation என்ற சிறிய விண்டோ கிடைக்கும். இதில் ஒரு டாகுமெண்ட் தானாக ஹைபனேட் செய்திடட்டுமா? பெரிய எழுத்துக்களில் உள்ள சொற்களை மட்டும் ஹைபனேட் செய்திடவா? என்ற ஆப்ஷன்களோடு Hot Zone எந்த அளவில் இருக்க வேண்டும் என்ற ஆப்ஷனும் தரப்படும். இதனை நாமே செட் செய்து கொள்ளலாம். பின் ஓகே கிளிக் செய்து வெளியேறி, ஏதேனும் ஒரு டாகுமெண்ட்டில் இதனைச் சோதனை செய்து கொள்ளலாம்.